ALL INDIA RADIO - TIRUCHIRAPPALLI

# மாநிலச் செய்திகள்

நேரம்: 01.45 pm

**23.09.2022**

தலைப்புச்செய்திகள்

1. சுமூக தீர்வுகளின் தலைமை நாடாக இந்தியா வேகமாக முன்னேறி வருவதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி கூறியுள்ளார்.

2. மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன், சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் விடுதலை பேராட்டவீரர்கள் மருதுபாண்டிய சகோதரர்களுக்கு இன்று அஞ்சலி செலுத்துகிறார்.

3. பல்கலைக்கழகங்களின் 41 உறுப்பு கல்லூரிகள், அரசு கல்லூரிகளாக மாற்றி அரசாணை வெளியிடப்பட்டுள்ளதாக மாநில உயர்கல்வித்துறை அமைச்சர் திரு, க. பொன்முடி தெரிவித்துள்ளார்.

4. இந்திய ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான இரண்டாவது 20-20 கிரிக்கெட் போட்டி நாக்பூரில் இன்று நடைபெறுகிறது.

இனி விரிவான செய்திகள்

பிரதமர்

நிலையான சுமூக தீர்வுகளின் தலைமை நாடாக புதிய இந்தியா வேகமாக முன்னேறி வருவதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி கூறியுள்ளார்.

குஜராத் மாநிலத்தில் தேசிய சுற்றுசூழல் மாநாட்டை இன்று காணொலிமூலம் தொடங்கிவைத்து பேசியஅவர், புதிய சிந்தனைகள், புதிய அணுகுமுறையுடன் இந்தியா முன்னேறி வருவதாக தெரிவித்தார்.

வேகமான பொருளாதார நாடான இந்தியா தனது சுற்றுச்சூழலையும் தொடர்ந்து வலுப்படுத்தி வருவதாக குறிப்பிட்டார்.

இதனொரு பகுதியாக, நாட்டின் வனபரப்பு அதிகரித்துள்ளதோடு, ஈரநிலங்களும், விரிவடைந்து வருவதாக தெரிவித்தார்.

கிர் காடுகளின் சிங்கங்கள் மற்றும் புலிகள், யானைகள், காண்டாமிருகங்கள், சிறுத்தைகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவது குறித்துஅவர் மகழ்ச்சி தெரிவித்தார்.

2070-ம் ஆண்டிற்குள் கரியமில வாயு இல்லாத நாடாக இந்தியா உருவெடுக்க நிர்ணயிக்கப்பட்டுள்ள இலக்கை எட்ட அனைத்து மாநிலங்கள் இணைந்து செயலாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

எதிர்கால சந்ததியினர் பயன்பெறும் வகையில் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் மக்களின் பங்களிப்பை அதிகரிக்க வேண்டுமென்றும் அவர்அறிவுறுத்தினார்.

திடக்கழிவு மேலாண்மை மற்றும் ஒருமுறை மட்டுமே பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் பொருட்களை அறவே அகற்றுவது தொடர்பான முயற்சிகளை இது வலுப்படுத்தும் என்றார்.

சுற்றுச்சூழல் தொடர்பான சிறந்த நடைமுறைகளை கற்றுக் கொள்ளவும், அதில் வெற்றி காண்பதற்கான தீர்வுகளை மாநிலங்கள் செயல்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் பிரதமர் வலியுறுத்தினார்.

சுற்றுச்சூழல் அமைச்சகம் பிற அமைச்சகங்களுடன் இணைந்து பணியாற்ற வேண்டும் என்றும அவர் அறிவுறுத்தினார்.

இந்த இரண்டு நாள் மாநாட்டில் வாழ்வாதாரங்கள், பருவநிலை மாற்றம், காடுகள் மேலாண்மை, மாசுகட்டுப்பாடு உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து விவாதிக்கப்படுகின்றன.

பிரதமர் – புத்தகம் வெளியீடு

புதிய இந்தியா குறித்த பிரதமரின் தேர்ந்தெடுக்கப்பட்ட உரைகள் அடங்கிய புத்தகத்தொகுப்பு புதுதில்லியில் இன்று வெளியிடப்பட்டது.

முன்னாள் குடியரசு துணைத்தலைவர் திரு. வெங்கைய்யா நாயுடு மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அனுராக்சிங் தாகூர், கேரள ஆளுநர் திரு. ஆரி.ஃ.ப் முகமது கான் ஆகியோர் இதனை வெளியிட்டனர்.

புதிய இந்தியா குறித்த பிரதமரின் தொலைநோக்கு பார்வை, தமது தலைமைப் பண்பு மூலம் நாட்டை முன்னெடுத்து சென்று, உலகளாவிய ஐந்தாவது பொருளாதார நாடாக இந்தியாவை உருவாக்குவது போன்றவை இதில் இடம்பெற்றிருப்பதாக குறிப்பிட்டார்.

**Prime Minister Narendra Modi Speaks** என்ற தலைப்பிலான இப்புத்தகம் ஹிந்தி ஆங்கில மொழிகளில் வெளியிடப்பட்டுள்ளது.

பிரதமர் பரிசு பொருட்கள்

பிரதமருக்கு கிடைத்த பரிசு பொருட்களின் மின்னனு ஏலம் வரும் 2-ம் தேதிவரை தொடர்ந்து நடைபெறும்

ஆயிரத்து 222 நினைவு பொருட்கள் ஏலம் விடப்படுகின்றன.

நவீன கலைபொருட்களுக்கான தேசிய அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ள இந்த பரிசு பொருட்களை 350-க்கும் மேற்பட்ட பள்ளி மாணக்கர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் பார்வையிட்டனர்.

மன்-கி-பாத்

பிரதமர் திரு. நரேந்திரமோடி அகில இந்திய வானொலியில் மன்-கி-பாத் மனதின் குரல் நிகழ்ச்சியில் 93-வது முறையாக நாளைமறுநாள் உரையாற்றுகிறார்.

பிரதமர் இதுவரை காதி ஆடைகளின் பயன்பாடு, போதைப்பொருள் தடுப்பு, பொதுத்தேர்வை மாணாக்கர் எதிர்கொள்ளும் முறை உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் தனது கருத்துக்களை தெரிவித்து வருவது குறிப்பிடத்தக்கது.

மன்சூக் மாண்டவியா

நாட்டு மக்கள் அனைவரையும் பாதுகாப்பதற்கான வலுவான சுகாதார முறையை அரசு கட்டமைத்து வருவதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் டாக்டர் மன்சூக் மாண்டவியா தெரிவித்திருக்கிறார்.

புதுதில்லியில் பொதுவிவகாரங்கள் அமைப்பு நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர் ஒருகோடியே 20 லட்சம் ஆயுஷ்மான நல மையங்கள் சிறப்பான முறையில் செயல்படுவதாக குறிப்பிட்டார்.

பிரதமரின் மக்கள் மருந்தகங்கள், மக்கள் நல திட்டங்கள், ஆயுஷ்மான் பாரத் சுகாதார இயக்கம் போன்றவற்றின் மூலம் அனைவருக்கும் குறைந்த செலவில் தரமான சுகாதார வசதிகள் கிடைப்பதாக எடுத்துரைத்தார்.

ஓஓஓஓஓஓ

எல்.முருகன்

மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன், சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் விடுதலை பேராட்டவீரர்கள் மருதுபாண்டிய சகோதரர்களுக்கு இன்று மாலை அஞ்சலி செலுத்துகிறார்.

முன்னதாக இன்றுகாலை பிள்ளையார்பட்டி அருள்மிகு கற்பக விநாயகர் திருக்கோவிலில் அமைச்சர் சுவாமி தரிசனம் செய்தார்.

இதனிடையே பி.ஜே.பி. தேசிய தலைவர் திரு. ஜே.பி.நட்டா, கட்சியின் மாநில மாவட்ட நிர்வாகிகளுடன் இன்று காரைக்குடியில் ஆலோசனை மேற்கொண்டார்.

2024-ம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலில் மேற்கொள்ள வேண்டிய நிலைப்பாடுகள் குறித்து இதில் விரிவாக ஆலோசிக்கப்பட்டது.

இந்த கூட்டத்தில் அமைச்சர் டாக்டர் எல் முருகன், கட்சியின் மாநிலத்தலைவர் திரு. அண்ணாமலை, கட்சியின் தேசிய மகளிர் அணி தலைவர், திருமதி. வானதி சீனிவாசன், மூத்த நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

ஓஓஓஓஓஓ

முதலமைச்சர்

முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் தலைமையில் அமைச்சரவை கூட்டம் வரும் 26-ம் தேதி நடைபெற உள்ளது.

சட்டப்பேரவை கூட்டத்தொடர் விரைவில் நடைபெற உள்ள நிலையில் இக்கூட்டம் முக்கியத்துவம் பெறுகிறது.

இந்நிலையில் முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின், வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பாக சென்னையில் வரும் 26-ம் தேதி ஆலோசனை மேற்கொள்ளவுள்ளார்.

தலைமை செயலகத்தில் அமைச்சர்கள் மற்றும் உயரதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொள்ளும் அவர், மழைநீர் வடிகால் பணிகளை துரிதப்படுத்துவது குறித்தும் ஆலோசனை நடத்துகிறார்.

இதனிடையே பள்ளிகளில் செயல்படுத்தப்பட்டு வரும் காலை உணவு திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து முதலமைச்சர் சென்னை தலைமை செயலகத்தில் ஆய்வு மேற்கொண்டார்.

முதலமைச்சர் – 1

தமிழ்நாட்டில் பட்டா மாறுதலுக்கு இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்கும் வசதி மற்றும் நகர்ப்புற புலவரைபடங்களை இணையவழியில் பதிவிறக்கம் செய்யும் எங்கிருந்தும், எந்நேரத்திலும் என்ற சேவையை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் சென்னை தலைமைசெயலகத்தில் இன்று தொடங்கி வைத்தார்.

இதன்மூலம் பொதுமக்கள் பொதுசேவை மையங்களுக்கு செல்லவும், வட்டார அலுவலகங்களில் இடைதரகர்களால் அவதிப்படுவதையும் தவிர்க்க வழிவகை ஏற்படும்.

பொன்முடி

தமிழ்நாட்டில் அரசு கல்லூரிகளில் பணிபுரியும் பேராசிரியர்களுக்கு பணி வரன்முறை செய்யப்பட்டு உள்ளதாக மாநில உயர்கல்வித்துறை அமைச்சர் திரு. க.பொன்முடி தெரிவித்துள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசியஅவர், இது தொடர்பான பேராசிரியர்களின் கோரிக்கைகள் ஏற்கப்பட்டதாக கூறினார்.

பல்கலைக்கழகங்களில் 41 உறுப்பு கல்லூரிகளை, அரசு கல்லூரிகளாக மாற்றி அரசாணை தற்போது வெளியிட்டுள்ளதாக கூறினார்.

..... வாய்ஸ் ......

பல்கலைக்கழக இணைப்பு கல்லூரிகளை அரசே ஏற்றுக்கொண்ட இந்நடவடிக்கைக்கு பா.ம.க. நிறுவனர் தலைவர் டாக்டர் ராமதாஸ் வரவேற்பு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள செய்தியில், இருப்பினும் பேராசிரியர் நியமனம், ஊதிய நிலுவை போன்றவற்றை உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டுள்ளார்.

மா.சுப்ரமணியன்

தமிழ்நாட்டில் மாணாக்கர்கள் தற்கொலை முடிவை எடுப்பதை தவிர்க்கும் வகையில் மனம் திட்டம் கலை அறிவியல் கல்லூரிகளிலும் கொண்டுவரப்படும் என்று மாநில மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்ரமணியன் தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடியில் காயாமொழி பகுதியில் புதிய செவிலியர் குடியிருப்பை இன்று தொடங்கிவைத்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசியஅவர், மருத்துவ கல்லூரிகளில் ஏற்கனவே தொடங்கப்பட்ட இத்திட்டத்தின் மூலம் பயிற்சி பெற்ற மாணாக்கரை கொண்டு நடைமுறைப்படுத்தப்படும் என்று கூறினார்.

முன்னதாக இன்றுகாலை தூத்துக்குடி விமான நிலையத்தில் பேசியஅவர், வரும் 4-ம் தேதிமுதல், பள்ளி மாணாக்கருக்கு தடுப்பூசி செலுத்தப்படும் என்று கூறினார்.

.... வாய்ஸ் ....

ஜிதேந்திர சிங்

ஒருங்கிணைந்த உயிரி சுத்திகரிப்பான்களுக்கான படைப்புதிறன் வழிமுறைகள், அறிமுகம் செய்யப்படுவதாக மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் உலகளாவிய தூய்மை எரிசக்தி மேம்பாடு தொடர்பான நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், பிரேசில், கனடா, ஐரோப்பிய ஆணையம், பிரிட்டன்

நாடுகளின் தரவுகள் மூலம் இந்த வரைபடங்கள் உருவாக்கப்பட்டிருப்பதாக அவர் கூறினார்.

எரிசக்தி, ஆராய்ச்சி மேம்பாடு பிரிவுகளில் கூடுதல் நிதிபெற இது வழிகோலும் என்றும் அவர் தெரிவித்தார்.

2030ம் ஆண்டிற்குள் புதைபடிமம் இல்லா எரிசக்தி திறன்மிகு நாடாக இந்தியா உருவெடுக்க இந்நடவடிக்கைகளின் அவசியத்தையும் அமைச்சர் வலியுறுத்தினார்.

தூய்மை எரிசக்தி பங்களிப்பின் மூலம் நாட்டின் எரிசக்தி திறன் வளர்ச்சி பெறுவதற்கான நடவடிக்கைகள் முனைப்புடன் மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அசோக் கெலாட்

காங்கிரஸ் கட்சி, தலைவர் தேர்தலில் போட்டியிடப் போவதாக ராஜஸ்தான் முதல்வர் திரு. அசோக் கெலாட் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், விரைவில் வேட்புமனு தாக்கல் செய்யவுள்ளதாக கூறினார்.

தற்போதைய சூழலில் எதிர்கட்சிகள் ஒன்றிணைய வேண்டியது அவசியம் என்றும் குறிப்பிட்டார்.

காங்கிரஸ் தலைவர் தேர்தல் அடுத்த மாதம் 17-ம் தேதி நடைபெறவுள்ள நிலையில், வேட்புமனு தாக்கல் நாளை தொடங்குகிறது.

வேலூர் – வாய்ஸ்:

வேலூர் மாவட்டத்தில் விவசாயிகளுக்கு நிலக்கடலை பறிக்கும் இயந்திரம் இன்று அறிமுகம் செய்யப்பட்டு செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.குமாரவேல் பாண்டியன் தெரிவிக்கிறார்.

... கலெக்டர் வாய்ஸ் ...

கோஆப்டெக்ஸ்:

காஞ்சிபுரம் கோ ஆப்டெகஸ் விற்பனை நிலையத்தில் நடப்பாண்டு ஒன்றரை கோடி ரூபாய் தீபாவளி விற்பனை இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக, இதன் மண்டல மேலாளர் ஜெ.நாகராஜன் தெரிவித்துள்ளார்.

- - வாய்ஸ் - -

இருவரி

தர்மபுரி மாவட்டத்தில் அரசு அலுவலர்களுக்கான வருமான வரிபிடித்தம் தொடர்பான விழிப்புணர்வு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் சாந்தி தலைமையில் இன்று நடைபெற்றது.

இதேபோல் நாமக்கல் மாவட்டத்தில் ஆட்சித்தலைவர் திருமதி. ஸ்ரேயா சிங் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இத்துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் வருமானவரி தாக்கல் செய்யும் முறைகள் குறித்து எடுத்துரைக்கப்பட்டது.

நாமக்கல் மாவட்டத்தில் சுகாதார பணியாளர்கள் பங்கேற்கும் விளையாட்டு போட்டிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஸ்ரேயாசிங் தொடங்கி வைத்தார்.

இரண்டு வாரம் நடைபெறவுள்ள இப்போட்டிகளில் கிரிக்கெட், கால்பந்து, கைப்பந்து, கபடி உள்ளிட்ட பிரிவுகளில் இப்போட்டிகள் நடத்தப்படுகின்றன.

கிரிக்கெட்

இந்திய ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான இரண்டாவது 20-20 கிரிக்கெட் போட்டி நாக்பூரில் இன்று நடைபெறுகிறது.

3 போட்டிகள் கொண்ட இத்தொடரில் ஆஸ்திரேலியா தற்போது 1-0 எனும் கணக்கில் முன்னிலையில் உள்ளது.

இத்துடன் இந்த செய்தியறிக்கை நிறைவடைந்தது.